***அறிவித்தல் இல. MoH-NP/2026/01***

**வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் காணப்படும் சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) தரம் III பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - 2026.**

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களின் NP/07/10/01/226 ஆம் இலக்க 26.03.2026 ஆம் திகதிய கடிதம் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் ஆளணியும் பயிற்சியும், வடக்கு மாகாணம் அவர்களின் NP/17/Cad/01/62 ஆம் இலக்க 30.03.2026 ஆம் திகதிய கடிதம் என்பவற்றின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாகவும், சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) தரம் III பதவியில் காணப்படும் 300 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது, வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் அவர்களால் 2026 மே மாதமளவில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 05.05.2026 ஆகும்.

**01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-**

2013.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) தரம் III பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள், அரச நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 03.07.2013 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர்.

1.1 நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

1.2 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கு கீழ்ப்படிதலுடன் அவ்வாறு கடமையாற்ற வேண்டிய உடற் தகுதியை கொண்டிருப்பதை கோரப்படும் வகையில் நிரூபித்தல் வேண்டும்.

1.3 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும்.

1.4 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை 300 ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அத்துடன் சகல வெற்றிடங்களையும் அல்லது பகுதி அளவிலான வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 02. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இற்கு அமைவான, சம்பளத் தொகுதி PL 1 - 2025 இற்கு ஏற்ப சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) பதவிக்கான திரட்டிய சம்பள அளவுதிட்டமானது ரூபா 40,000 – 10 x 450 - 10 x 490 - 10 x 540 – 12 x 590 – 61,880/- ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் மூன்றாவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை - III இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 03. பொதுவான தகைமைகள் :-

3.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

3.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

3.4 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.5 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட சகல தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

## 04. கல்வித் தகைமைகள் :-

4.1 க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02)** பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். எனினும் **ஒரு அமர்வில் ஆகக்குறைந்தது ஐந்து (05)** பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

## 05. ஆட்சேர்ப்பு முறை :-

5.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப்பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
5.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கு வரிசையில் (Merit Order) ஆட்சேர்ப்பிற்கு தெரிவு செய்யப்படுவார்கள். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

**06. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் கட்டணம் :-**

விண்ணப்பதாரி, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் கட்டணம் ரூபா. 500/- இனை "செயலாளர், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்" என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

**07.விண்ணப்பிக்கும் முறை :-**

7.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "செயலாளர், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்ட) தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

7.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு கடிதங்கள் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு கடிதங்கள் அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

7.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம். விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அழைப்பு கடிதங்கள் கிடைக்காவிடின், அழைப்பு கடிதங்கள் கிடைக்காமை பற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் "சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 222 0807 / தொலைநகல் இல: 021 222 0806 / மின்னஞ்சல்: mhealthnpc@gmail.com)

- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

**08. ஆளடையாளத்தை நிரூபித்தல்:-**

ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று நேர்முகப் பரீட்சை சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
- செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
- செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரியொருவரின் உரிமை "செயலாளர், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்" அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நேர்முகதாரிகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

**09. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, ரூபா.854,880.00 இற்கு குறையாத தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

**10. பரீட்சைத்திட்டம்:-**

இது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகும். இக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையானது கீழ்குறிப்பிட்டவாறு பகுதிகளைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | விடயம் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 40 புள்ளிகள் |
| 02 | அனுபவம் | 55 புள்ளிகள் |
| 03 | நேர்முகப் பரீட்சை சபையினால் இனங்காணப்பட்ட தகுதிகள் | 05 புள்ளிகள் |
| **மொத்த புள்ளிகள்** | | **100 புள்ளிகள்** |

- விபரமான புள்ளித்திட்டம் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளது.

**11. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகள்:-**

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும்.

**கவனிக்கவும் :-**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் 021 222 0807 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

***ப.ஜெயராணி***
*செயலாளர்,*
*சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு,*
*வடக்கு மாகாணம்.*
*09.04.2026*